அரிசனங்களின் வீட்டு மனை (நெல்லை தாலுகா)

*582 கேள்வி—திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நெல்லை தாலுகா தச்சநல்லூர் பஞ்சாயத்தில் ஆனந்த புரம் (நன்னியாதிரியான்பச்சேரி) அரிசனங்களின் வீட்டு மனைகளின் தளத்தை உயர்த்தும் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 520 கட்டும்படி நெல்லை கலெக்டர் மேற்படி ஊர் அரிசனங்களிடம் கேட்டது உண்மையா?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம். நில மட்டத்தை உயர்த்து வதற்கான செலவில் பாதித் தொகையை ஹரிஜனங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. முதலில் போட்ட செலவு மதிப்பீட்டின்படி இப்பாதித்தொகை ரூ. 2,150 ஆகும். ஆனால், ஹரிஜனங்கள் ரூ. 520 மட்டும் வசூல் செய்து, மேற்கொண்டும் நன்கொடை திரட்ட தங்களால் இயலாது என அறிவித்து விட்டனர்.

(இ) திருத்த மதிப்பீட்டின்படி நில மட்டத்தை உயர்த்து வதற்கான செலவு ரூ. 3,780 ஆகும். எனவே ஆர்ஜிதம் செய்யப் பட்ட நில மட்டத்தை உயர்த்துவதற்கான செலவில் எஞ்சிய தொகையாகிய ரூ. 3,260 அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ் வேலையை நிறைவேற்ற டெண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. காண்டிராக்டர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இவ்வேலை காண்டிராக் டருக்கு விடப்படும்.

Government offices in private buildings

* 583 *Q.*—SRI K. CHEEMAICHAMY, SRI C. M. AMBIKAPATHI: Will the Hon. the Minister for Works be pleased to state the total amount paid as rent for private buildings occupied by State Government offices during the year 1961–62, month-war?

THE HON. SRI V. RAMAIAH: The total amount for the year is Rs. 33,04,877·00. Month-wise details are not readily available.

திரு. கரு. சீமைச்சாமி: வாடகைக் கட்டடங்களில் அரசாங்க அலுவலகங்களை வைக்காமல், அரசாங்கத்திற்கே சொந்தமாகக் கட்டடம் கட்டத் திட்டம் எதாவது இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: அத்தகைய திட்டம் அரசாங் கத்தில் இருக்கிறது. ஆனால், கட்டடங்கள் கட்டவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கும்போது, தேசிய நெருக்கடி வந்துவிட்டது. அதன் காரணமாக, அந்த வேலையைச் சற்றுத் தளர்த்தியிருக் கிறோம். முக்கியமாக சேப்பாக்கத்தில் ரெவினியூ போர்டு கட்டத்திற்கு முன்னால் பார்த்தால் அஸ்திவாரம் போடப்பட்ட நிலையிலேயே கட்டடம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது தெரியும். நெருக்கடியின் காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு வேண்டிய முயற்சியை உடனடியாக எடுக்கவேண்டுமென்ற முயற்சியிலேதான் அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, 1961-62-ம் ஆண்டில் வாடகையாகக் கொடுத்த மொத்தத் தொகை ரூபாய் 33 லட்சம் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களுக்காகத் தனிப் பட்டவர்களுக்கு வாடகையாகக் கொடுத்த தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா ?

The Hon. Sri V. RAMAIAH : I do not have the break-up of the figures. If the hon. Member puts a separate question, I will answer it.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அரசாங்க அலுவலகங்கள் பூராவுமே சொந்தக் கட்டடத்தில் இருக்க வேண்டுமென்கிற திட்டம் உண்டா ? அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா: சொந்தக் கட்டடங்கள் இருக்க வேண்டும் என்ற முறையிலேதான் திட்டத்தைப் போட்டுப் படிப் படியாகக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், தேனாம்பேட்டையில் டி.எம்.எஸ். ஆபீஸ் காம்பவுண்டில் மூன்று நான்கு கட்டடங்கள் கட்டி முடித்திருக்கிறோம். அங்கு இன்னும் இரண்டு கட்டடங்கள் வர வேண்டியிருக்கின்றன. சேப்பாக்கத்தில் ரெவின்யூ போர்டு கட்ட டத்திற்கு முன்னால் ஒரு பல அடுக்குக் கட்டடம் கட்டி, சென்னை நகரத்தில் வாடகைக் கட்டங்களில் இருக்கும் அரசாங்க அலுவல கங்களை அதில் வைக்கவேண்டுமென்பது உத்தேசம். அதே போன்று ஜில்லா தலைமையிடங்களிலும், அங்குள்ள தேவைக்குத் தகுந்த முறையில் கட்டடம் கட்டுவதற்காக ப்ளான் எல்லாம் தயார் செய்திருக்கிறோம். தேசிய நெருக்கடி காரணமாகத்தான் அந்த வேலைகளும் துரிதமாக நடத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்னை நகரிலுள்ள வாடகைக் கட்டி டத்தில் இருக்கும் எல்லா சர்க்கார் அலுவலகங்களையும் செக்ர டேரியட்டுக்கு மாற்றிவிட்டு, செக்ரடேரியட்டை நகரத்திற்கு வெளியே தள்ளி ஒருபுறத்தில் கட்ட திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா.

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாக ஒரு கேள்வி வேண்டும்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, சத்தியமூர்த்தி பவனில் விமென் வெல்பேர் ஆபீசை வைத்து மாதம் 1,500 ரூபாய் வாடகை கொடுக்கப்படுவதாகச் சொல்வது உண்மையா ?

21st July 1964]

கனம் திரு. வெ. ராமைய்யா : அங்கே சோஷல் வெல்பேர் போர்டின் அலுவலகம் இருக்கிறது. வாடகை என்ன என்று தெரியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஒரு கட்சி காரியாலயத்தில் சர்க்கார் காரியாலயத்தை வைத்து, வாடகையாகக் கொடுப்பது நல்ல மரபு என்று கருதுகிறீர்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : என்னைப் பொறுத்த வரையில் சென்னை நகரத்தில் அந்தக் கட்டிடம் சோஷல் வெல்பேர் போர்டுக்குக் கிடைத்தது லாபம் என்று கருதுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : செக்ரடேரியட் இருக்கிற இடம் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. இலாக்காக்கள் விரிவு அடைந்து வருவதனால் இடம் போதவில்லை என்று இந்தக் கட்டிடத்தை வேறு எங்காவது மாற்ற யோசனை உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது எவ்வித யோசனையும் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தனியார் கட்டிடங்களுக்கு வாடகையாக 33 லட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இதற்கெனவே ஒரு ஐந்தாண்டுத் திட்டமாவது தயாரித்து கூடிய சீக்கிரத்தில் தேசியநெருக்கடி தலையிடாமல் மாவட்ட தலைநகரங்களிலும் சென்னை நகரத்திலும் அரசாங்க கட்டிடங்களை கட்ட ஏற்பாடு செய்ய முடியுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அரசாங்கம் எந்த எந்த காரியத்தை எப்படி செய்ய வேண்டும் என்பதை பொதுவாக ஆராய்ந்து முடிவு எடுக்கிறது. இந்த கட்டிடங்களை கட்டுவது பற்றியும் எல்லா பிரச்னைகளையும் வைத்து பரிசிலனை செய்துதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

*** 584 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட தலைமையிடத்தில் எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்படுகின்றன ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வாடகை கொடுக்கப்படுகிறது ?

(உ) எத்தனை கட்டிடங்களை காலிசெய்யும்படி கோரப்பட்டிருக்கிறது ?

(எ) புதிய கட்டிடங்களை கட்டும் திட்டம் ஏதாகிலும் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 54.

(இ) ரூபாய் 64,376.

(உ) இதுபற்றிய முழு விவரமும் கிடைக்கவில்லை.

(எ) இல்லை.